செய்தி வெளியீடு எண் : 887 நாள் : 11.05.2023

## தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டை மனை ஒதுக்கீட்டுதாரர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக தொழில் மனைகளுக்கு பட்டா

## மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் 208 தொழில்முனைவோர்களுக்கு பட்டா வழங்கினார்.

----------------

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (11.5.2023) சென்னை, கிண்டி, சிட்கோ தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 208 தொழில்முனைவோர்களுக்கு பட்டா வழங்கி பேசியதாவது–

"1970–ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, குறு, சிறு, நடுத்தர தொழில்புரிவோருக்காக சிட்கோ தொழிற்பேட்டைகளை உருவாக்கினார். தமிழகம் முழுவதும் 14 ஆயிரத்து 983 தொழில் மனைகளுடன் 127 தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன.

இந்த 127 தொழிற்பேட்டைகளில் 60 தொழிற்பேட்டைகளில் உள்ள 3,700 ஏக்கர் நிலம் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் இருப்பதால், தொழில் நிறுவனங்கள் கிரைய பத்திரம் பெற்றிருந்தாலும், பட்டா பெற முடியாத நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது. இதனால், தொழில்முனைவோர்கள் நிலத்தினை வைத்து கடன் பெறுவதும், தொழிலை விரிவுபடுத்தவும் முடியாமல் பல சிக்கல்களை சந்தித்து வந்தனர். கழக அரசு பொறுப்பேற்றவுடன், இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென அரசிடம் தொழில்முனைவோர்கள் கோரிக்கை வைத்தனர். தொழில் துறையின் மீது எப்போதும் தனிகவனம் செலுத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த கோரிக்கைகளின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, நில வகைப்பாட்டினை மாற்றிட 30.11.2021 அன்று தலைமைச் செயலர் தலைமையில் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவினை அமைத்து (Empower Committee) அமைக்க உத்தரவிட்டார்கள்.

இக்குழு, முதல்கட்டமாக 32 தொழிற்பேட்டைகளில் 1,569 ஏக்கர் நிலங்களுக்கான வகைப்பாட்டினை மாற்றி, பட்டா வழங்க பரிந்துரைத்து அரசாணைகள் வெளியிடப்பட்டு உள்ளது. இதனடிப்படையில், 1,245 ஏக்கர் நிலம் பட்டா வழங்குவதற்காக தமிழ்நாடு சிட்கோ பெயரில் நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, 28.3.2023 அன்று தலைமை செயலகத்தில் நடைபெற்ற விழாவில் கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டையை சேர்ந்த 5 தொழில்முனைவோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது திருக்கரங்களால் பட்டா வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, இன்று 9 தொழிற்பேட்டைகளில் உள்ள 280 தொழில்முனைவோர்களுக்கு 70 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்திற்கான பட்டா வழங்கப்பட்டு உள்ளது. ஏனையோர்க்கு படிப்படியாக பட்டா வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான இரு பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும், சிட்கோ தொழிற்பேட்டையில் சுகாதார பணிகளை மேற்கொள்ளும் 25 தூய்மை பணியாளர்களுக்கு சீருடையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திரு. வி.அருண்ராய், இ.ஆ.ப. சிட்கோ, மேலாண்மை இயக்குநர் திருமதி சோ. மதுமதி, இ.ஆ.ப., தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி கிரேஸ் லால்ரிண்டிக்கி பச்சாவ் இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in